பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 08 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கான படிக்கல்லாக வந்தே பாரத் ரயில் சேவையின் விரிவாக்கம் அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. சென்னை – நாகர்கோவில், மதுரை – பெங்களூரு வந்தேபாரத் ரயில்கள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
4. பொதுவிநியோக திட்டத்தில் இம்மாதத்துக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒக்கீட்டை குடும்ப அட்டைதாரர்கள் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வரை பெற்றுக் கொள்ளலாம் என மாநில அரசு தெரிவித்துள்ளது.
5. பி எஸ் ஏ சேலஞ்சர் குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் பட்டம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கான படிக்கல்லாக வந்தே பாரத் ரயில் சேவையின் விரிவாக்கம் அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சென்னை – நாகர்கோவில், மதுரை – பெங்களூரு, மீரத் - லக்னோ ஆகிய மூன்று புதிய வழித்தடங்களில் வந்தேபாரத் ரயில்களை காணொலி வாயிலாக இன்று தொடங்கி

வைத்து பேசிய பிரதமர், இந்த மூன்று புதிய ரயில்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நகரங்களை இணைப்பதாகக் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் கோவில் நகரமான மதுரை, தொழில்நுட்ப நகரமான பெங்களூருடன் இணைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நவீனமயமாக்கப்பட்ட இந்திய ரயில்வேயின் புதிய முகமாக வந்தேபாரத் ரயில்கள் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

அதிவேக ரயில்கள் பயன்பாட்டுக்கு வந்ததை அடுத்து மக்கள் தங்களின் தொழில் விரிவாக்கம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கான புதிய நம்பிக்கை பிறந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடெங்கிலும் தற்போது 102 வந்தே பாரத் ரயில் சேவைகள் இருப்பதாகக் கூறிய பிரதமர், நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் விமான நிலையங்களைப்போல கூடுதல் வசதிகளை பெறுவதற்கான திட்டமும் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறினார்.

அனைத்து ரயில் நிலையங்களும், ரயில்வே கட்டமைப்பில் இணைக்கப்படும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதால், மக்களின் பயணம் எளிமையாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து தரப்பு மக்களுக்கும் வசதியான போக்குவரத்து சேவையை ரயில்வே உறுதி செய்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் முயற்சியில் தெற்கு ரயில்வே முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்த பிரதமர், நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஆறாயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா சுயசார்பு இந்தியா தொலைநோக்கு திட்டங்களுக்கு புதியதாக இன்று தொடங்கப்பட்ட மூன்று வந்தேபாரத் ரயில்களும் ஊக்கம் அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்,

உத்திரபிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களும் உலகத்தரத்திலான ரயில் சேவையை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடிக்கடி ரயில் பயணம் மேற்கொள்வோர், தொழில் வல்லுநர்கள், வர்த்தகர்கள் மற்றும் மாணவ சமுதாயத்தினருக்கு தரமான ரயில் சேவையை வந்தே பாரத் ரயில்கள் அளிப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நீண்டகாலம் ஆட்சி செய்த கட்சிகள் ரயில்வே துறையை மேம்படுத்த தவறிவிட்டதாகக். கூறினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கடந்த பத்து ஆண்டுகளில் ரயில்வேக்கான ஒதுக்கீட்டை பத்து மடங்கு அதிகரித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

31 ஆயிரத்து 180 கிலோமீட்டர் தூரத்துக்கு புதிய இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆயிரத்து 326 ரயில் நிலையங்கள் முற்றிலும் மறு சீரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கவாச் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ரயில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகளும் நடைபெற்று வருவதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடைபெற்ற மூன்று வந்தேபாரத் ரயில்கள் தொடக்க நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியல் பேசிய திரு எல் முருகன், தமிழகத்தில் தற்போது தொடங்கப்பட்டிருக்கும் இரண்டு ரயில்களையும் சேர்த்து மொத்தம் எட்டு வந்தே பாரத் ரயில்கள் இயங்குவது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்.

வந்தேபாரத் ரயில்கள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் -எல் முருகன் ) -44--- செகண்ட்*

மதுரையில் வந்தே பாரத் ரயில் சேவை தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரயில்வே இணை அமைச்சர் திரு சோமண்ணா, நாகர்கோவில் வந்தேபாரத் ரயில் விருதுநகரில் நின்று செல்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார்.

ரமேஸ்பரம் பாம்பன் புதிய ரயில் பாலத்தில் விரைவில் போக்குவரத்து தொடங்கப்படும் என்றும், மதுரை கூடல்நகர் ரயில் நிலையத்தை இரண்டாவது முனையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மண்டல மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், குழந்தைகளை வழி நடத்துவதிலும், அவர்களை அடுத்தக்கட்ட கல்வி பயில கொண்டு செல்வதற்கும் பெற்றோர் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்த தலைமுறையினரின் நலனுக்கான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாகவும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - அன்பில் மகேஷ் ) -40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உயர்கல்வி படிப்புகளில் சேரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் நடைபெற்ற அண்ணா பலைக்கலைக்கழக பொறியியல் மாணவ மாணவியருக்கான பட்டமளிப்பு விழாவில், பட்டங்களை வழங்கி பேசிய அவர், உயர்கல்வியில் சேரும் மாணவ மாணவிகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் புதிய திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

பள்ளி கல்லூரி மாணவ மாணவியருக்கு இலவச தங்கும் விடுதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதால், கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் உயர்கல்வியில் சேர்ந்து கொள்ளவதாகவும் திரு பொன்முடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு நடமாடும் கால்நடை மருத்துவ ஆம்புலன்ஸ் வழங்கப்படும் என மாநில மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் நடமாடும் கால்நடை மருத்துவ ஆம்புலன்ஸ் சேவையை இன்று அவர் தொடங்கி வைத்தார்.

கிராமப்புறங்களில் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் நெடுந்தூரம் சென்று என்று கால்நடைகளுக்கு சிக்சசை அளிக்கும் சிரமத்தை தவிர்ப்பதற்காக முதல்கட்டமாக 200 ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் கிராமப்புற விவசாயிகள் மிகவும் பயன்பெறுவார்கள் என்றும் திரு அனிதா ராதாகிருஷ்ணன் கூறினார்.

**[]<<<>>>[]**

பொதுவிநியோக திட்டத்தில் இம்மாதத்துக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒக்கீட்டை பெறாத குடும்ப அட்டைதாரர்கள் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வரை பெற்றுக் கொள்ளலாம் என்று மாநில உணவுப் பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கான ஒதுக்கீட்டை முழுமையாக பெறும் வகையில் இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக இன்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

திருநெல்வேலி மாவட்டம் கூட்டப்புளி கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணியை மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

[]<<<>>>[]

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 12 ஆயிரத்து 775 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திருமதி அருணா இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

திருசெந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான பச்சை சாத்தி சப்பர வீதி உலா இன்று நடைபெற்றது.,

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டத்தில் வனப்பரப்பை அதிகரிக்கும் நோக்கில் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளதாக மாவட்ட வனத்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

பி எஸ் ஏ சேலஞ்சர் குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனகத் சிங் பட்டம் வென்றார்.

கொல்கத்தாவில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர் 11-5, 11-3, 11-7 என்ற செட் கணக்கில் பிலிப்பைன்ஸின் ஜெமிக்கா அரிபாடோ-ஐ வென்றார்.

***<u>End of News</u>***